FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364188

1. District : கள்ளக்குறிச்சி PS: இ.கு.க.பிரிவு Year: 2026 FIR No.: 10/2026 Date: 23.09.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of corruption Act Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: 1988 as Amended by the Prevention Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: of corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 22.09.2026 Date to : 22.09.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 15.00 Hrs Time to : 23.50 Hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 23.09.2026 Time : 14.00 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 23.09.2026 Time : 14.00 Hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 40 கி.மீ கிழக்கு
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி இருங்கிராம்பட்டை கருவாட்சி அலுவலகம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. பரிதராஜ் (b) Father's/ Husband's Name : பெருமாள்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : இந்தியர் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation துணை தலைமை ஆசிரியர் (g) Address : மாவட்ட கல்வி அலுவலகம்
தொழில் முகவரி கள்ளக்குறிச்சி மாவட்டம்.
விருதம்பட்டும் பிறரும் கள்ளக்குறிச்சி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. N. நெடுஞ்செழியன், கருவாட்சி அலுவலர், 2. திரு. V. கோவிந்தராஜ் பணிமேற்பார்வையாளர்
3. திருமதி K. வெண்ணிலா, இரவாயில் உதவியாளர் அனைவரும் கருவாட்சி அலுவலகம்,
இருங்கிராம்பட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

23.09.2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

23.09.2026 - 17.30 Hrs.

Name: பெயர் E. அருணாசலம்
Rank: நிலை .....No. என் .....
காவல் ஆய்வாளர்
இ.த.க. பாரை
கள்ளக்குறிச்சி.

கள்ளக்குறிச்சி ஊ.த.க.பிரிவு குற்ற எண்.10/2026, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12 இன் விபரம்.

பணிந்து அனுப்பப்படுகிறது. அம்மையீர், நான் இன்று 23.09.2026-ந் தேதி சுமார் 14.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.ஸ்ரீதரன் அவர்கள் கொடுத்த புகார் மனுவை பெற்று 23.09.2026, 16.00 மணிக்கு கள்ளக்குறிச்சி ஊ.த.க பிரிவு குற்ற எண்.10/2026/KLK, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வாதி கொடுத்த புகார் மனுவின் விபரம் அனுப்புநர் பெ.ஸ்ரீதரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கள்ளக்குறிச்சி.ந.க.எண்:ஆகு1/507/2026, நாள்.23.09.2026 அய்யா, பொருள்:திடீர் ஆய்வு - கள்ளக்குறிச்சி மாவட்டம் - உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகம் 22.09.2026 - கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் ஆய்வாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக:- பார்வை : திடீர் ஆய்வு மகஜர், நாள்:22.09.2026. கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட, துணை ஆய்வுக்குழு அலுவலரான ஸ்ரீதரன் ஆகிய நான் 22.09.2026-ம் தேதி எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது கள்ளக்குறிச்சி மாவட்ட உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையாளர், நிர்வாக அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் வீட்டு வரி, தொழில் வரி, சொத்து வரி ஆகியவை வசூலித்தல், புதிய வீடுகள் மற்றும் புதிய வணிக வளாகங்கள் ஆகியவற்றிற்கு கட்டிட வரைபட அனுமதி வழங்குதல், அனுமதி அற்ற கட்டிடங்களுக்கு புதிய அனுமதி வழங்குதல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேடியாகவும், வருவாய் ஆய்வாளர் மற்றும் காசாளர் மூலமாகவும் அலுவல் நேரத்திலும் அதன் பின்பும் கையூட்டு பெறுவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு சுமார் 13.30 மணிக்கு சென்று அங்கு பணியில் இருந்த திரு.அருண்ராஜ், காவல் ஆய்வாளர் அவர்களிடம், உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து நானும் காவல் ஆய்வாளரும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினருடன் உடனடியாக அரசு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 14.50 மணியளவில் உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் நகராட்சி அலுவலகத்தை கண்காணித்து மாலை சுமார் 15.00 மணிக்கு உளுந்தூர்பேட்டை to திருச்சி ரோட்டில் கிழக்கு பார்த்தவாறு அமைந்து இருக்கும் நகராட்சி அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். அப்போது எங்களையும், எங்களது குழுவினரையும் கண்ட சிலர் பயந்து செல்ல முற்பட்டனர். அப்போது நாங்கள் முகப்பு வாசல் கதவை எங்களுடன் வந்த காவல் குழுவினரை மூட சொல்லிவிட்டு, அலுவலகத்தில் இருந்து செல்ல முற்பட்டவர்களை, அலுவலகத்தின் முன் ஹாலில் உட்காரவைத்து விட்டு, காவலர்களை நியமித்துவிட்டு

அலுவலகத்தின் உள்ளே சென்றோம். அங்கு நகராட்சி ஆணையாளர் திருமதி.S.K.புஷ்ரா அவர்கள் அறைக்கு சென்று பார்த்தபோது அங்கே அவர் இல்லாத காரணத்தால் அவர் அறைக்கு பக்கத்தில் இருந்த பொது பிரிவு அறைக்கு சென்றோம். அங்கு அமர்ந்திருந்த நபரை விசாரிக்க, தான் நகராட்சி நிர்வாக அலுவலர் (நிலை-2) சோமசுந்தரம் என்று சொன்னார். அவர்களிடம் மேற்படி நகராட்சி ஆணையாளரை பற்றி கேட்ட போது காலையில் அலுவலகம் வந்ததாகவும் அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு பேரிடர் மேலாண்மை கலந்தாய்வு கூட்டத்திற்கு சென்றதாகவும் இன்னும் வரவில்லை என்று கூறினார். பின்னர் அவரிடம் எங்களையும், காவல் குழுவினரையும் எங்களது அடையாள அட்டை காண்பித்து அறிமுகம் செய்துகொண்டோம். பின்னர் அவரை பற்றி விசாரிக்க தன் பெயர் திரு.சோமசுந்தரம், த/பெ திருநாவுக்கரசு, நிர்வாக அலுவலர் (நிலை-2), நகராட்சி, உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம் என்றும், தான் எண்.10, கமலா நகர், விழுப்புரம் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாக கூறினார். பின்னர் நானும், காவல் ஆய்வாளரும் மற்றும் காவல் குழுவினரும் மேற்படி நிர்வாக அலுவலர் திரு.சோமசுந்தரம் முன்னிலையில், எங்களை சுயபரிசோதனை செய்து காண்பித்து எங்களிடம் பணமோ பொருளோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு அவரை இத்திடீர் சோதணையின்போது உடனிருக்கமாறு கேட்டுகொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து நிர்வாக அலுவலரின் அறையை ஒட்டி கிழக்கு பார்த்து இருந்த முதலாவது இருக்கை காலியாக இருந்தது. அதை பற்றி கேட்க, மேற்படி இருக்கை திரு.முத்துவேல், வரிவசூல் செய்பவரின் இருக்கை என்றும், அவர் இன்று விடுப்பில் உள்ளதாக தெரிவித்தார். அவருக்கு இடது புறத்தில் கிழக்கு பார்த்தவாறு இருந்த இரண்டு இருக்கைகளும் காலியாகவே இருந்தன. மேற்படி இரண்டு இருக்கைகள் பற்றி கேட்க, அது திரு.பழனிவேல் மற்றும் திருமதி.புவனேஸ்வரி இருக்கை என்றும், இருவரும் இன்று விடுமுறையில் உள்ளதாக தெரிவித்தார். பின்னர் அந்த இருக்கைக்கு இடது புறத்தில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்தவரை விசாரிக்க தன் பெயர் திருமதி.புஷ்பா, தட்டச்சர் (தற்காலிகம்) என்று கூறினார். மேற்படி அறையில் இருந்த நபர்களில் பெண் அலுவலர்களை பெண்காவலர் திருமதி.தேவிகா அவர்கள் உதவியுடனும் மற்ற அலுவலர்களையும் அவர்களது இருக்கையையும் காவல் குழுவினரை வைத்து சோதனை செய்ததில் திரு.சோமசுந்தரம், நிர்வாக அலுவலர் (நிலை-2) என்பவரிடம் மட்டும் ரூ.900/-ம் இருந்தது. அவரை விசாரணை செய்ததில் அவர் கூறிய காரணம் ஏற்புடையதாக இருந்ததால் அவர் பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி அலுவலக நுழைவுவாயிலுக்கு இடதுபுறம் வடக்கு பார்த்து இருந்த வரிவசூல் பிரிவிற்கு சென்று அங்கு கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க, தன் பெயர் திரு.பாரதி, இளநிலை உதவியாளர் (காசாளர்) என்றும் கூறினார். மேற்படி அறையில் இருந்த அவரை, காவல் குழுவினரை வைத்து சோதனை செய்ததில் அவரிடம் ரூ.260/-ம் இருந்தது. அதை பற்றி விசாரணை செய்ததில் அவர் கூறிய காரணம் ஏற்புடையதாக இருந்ததாலும், இன்றைய நாள் தன்பதிவேட்டில் தான் கொண்டு வந்துள்ள பணத்தை பதிவு செய்த காரணத்தினாலும் அவர் பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அவரின் இருக்கையை சோதணை செய்ததில் ரூ.85,139/- இருந்தது. மேற்படி தொகையை பற்றி கேட்க அது இன்றைய நாளுக்கான வரிவசூல் என்று கூறினார். மேற்படி தொகையையும் கணிணியில் இருந்த தரவுகளை ஒப்பிட்டு பார்க்கும்போது இரண்டும் சரியாக

இருந்ததனால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி கட்டிடத்தில் தெற்குபுறத்தில், படிக்கு பக்கத்தில் இருக்கும் வருவாய்பிரிவு அறைக்கு சென்று அங்கு வாசற்படிக்கு எதிரே உள்ள இருக்கை பற்றி விசாரிக்க, அது வருவாய் ஆய்வாளரின் இருக்கை என்றும், தற்போது வருவாய் ஆய்வாளர் பதவி காலியாக உள்ளதாக தெரிவித்தனர். பின்னர் மேற்படி இருக்கைக்கு நேர் பின்னே இருந்த நபரை பற்றி விசாரிக்க தன் பெயர் திரு.சக்திவேல், வருவாய் உதவியாளர் (F1 பிரிவு) என்று சொன்னார், அவர் இருக்கைக்கு இடது புறத்தில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த இருக்கையில் உள்ள நபரை பற்றி விவாரிக்க, தன் பெயர் திருமதி.வெண்ணிலா, வருவாய் உதவியாளர் என்றார். அவருக்கு எதிரே மேற்கு பார்த்து இருக்கையில் இருந்த நபரிடம் விசாரிக்க தனது பெயர் திரு.முத்துவேல், வருவாய் உதவியாளர் என்றும் சொன்னார். மேற்படி அறையில் இருந்த நபர்களில் பெண் அலுவலர்களை பெண்காவலர் திருமதி.தேவிகா அவர்கள் உதவியுடனும் மற்ற அலுவலர்களையும், அவர்களது இருக்கைகளையும் காவல் குழுவினரை வைத்து, சோதனை செய்ததில் கைப்பற்றகூடிய பணமோ, ஆவணமோ எதும் இல்லை. பின்னர் வருவாய் பிரிவிற்கு இடது பக்கத்தில் உள்ள பொது சுகாதார பிரிவிற்கு சென்று அவ்வறையின் வாயிலுக்கு நேரே வடக்கு இருந்த இருக்கையில் உள்ள நபரை பற்றி விசாரிக்க, தன் பெயர் திருமதி.பவித்ரா, தட்டச்சர் (தற்காலிகம்), என்றும், அவருக்கு இடது பக்கத்தில் வடக்கே உள்ள இருக்கையில் உள்ள நபரை விசாரிக்க திரு.தங்கராஜ், இளநிலை உதவியாளர்(H1) என்றும், அவருக்கு இடது பக்கத்தில் வடக்கு பார்த்து இருந்த இருக்கையில் உள்ளவரை விசாரிக்க திரு.கணேசன், களபணியாளர் என்றும், அவருக்கு பக்கத்தில் கிழக்கு பார்த்த இருந்த இருக்கையை பற்றி கேட்க, அது திரு.கந்தசாமி, துப்புரவு ஆய்வாளர் இருக்கை என்றும் சொன்னார்கள். மேற்படி அறையில் இருந்த நபர்களில் பெண் அலுவலர்களை பெண்காவலர் திருமதி.தேவிகா அவர்கள் உதவியுடனும் மற்ற அலுவலர்களையும், அவர்களது இருக்கைகளையும் காவல் குழுவினரை வைத்து, சோதனை செய்ததில் கைப்பற்றகூடிய பணமோ, ஆவணமோ எதும் இல்லை. பின்னர் பொது சுகாதாரப்பிரிவிக்கு நேர் எதிரே உள்ள அறையை பார்த்தபோது மேற்படி அறையானது கூட்டறங்கு அறையாக இருந்தது. மேற்படி அறைக்கு வடக்கு பக்கம் நகரமைப்பு பிரிவு இருந்தது. மேற்படி அறையின் உள்ளே சென்றபோது வாயிலுக்கு நேராக இருந்த இருக்கையை பற்றி கேட்டபோது, மேற்படி இருக்கையானது திருமதி.திவ்யா, நகரமைப்பு ஆய்வாளர் அவர்களின் இருக்கை என்றும் அவர் மதியம் வரை இருந்ததாகவும், தற்போது உணவு அருந்த சென்றவர், வரவில்லை என்று தெரிவித்தார்கள். மேற்படி அறைகளையும் திருமதி.திவ்யா அவரது இருக்கையையும் சோதனை செய்ததில் கைப்பற்றகூடிய பணமோ, ஆவணமோ எதும் இல்லை. அதனை தொடர்ந்து மாடிபடிவழியாக மேற்படி அலுவலகத்தின் முதல் தளத்திற்கு சென்றபோது அங்கு தென்மேற்கு மூளையில் இருந்த நகராட்சி பொறியாளர் அறையை பார்த்தபோது, மேற்படி அறையில் வாயிலுக்கு நேரே கிழக்கு பார்த்து போடப்பட்டிருந்த இருக்கையில் திரு.தேவநாதன், நகராட்சி பொறியாளரும், அவர் மேஜைக்கு நேர் எதிரே இருந்த இருக்கையில் திரு.வைத்தியநாதன் த/பெ சிவலிங்கம், Municipal Vice Chairman என்பவர் அமர்ந்திருந்தார். அவர்களை சோதனை செய்ததில் திரு.வைத்தியநாதன் த/பெ சிவலிங்கம், Municipal Vice Chairman என்பரிடம் மட்டும் ரூ.2,000/- இருந்தது. மேற்படி பணத்தை பற்றி கேட்க, அது தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக

கூறினார். அவர் கூறிய காரணம் ஏற்புடையதாக இருந்ததால் மேற்படி பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவ்வறையை சோதனை செய்ததில் கைபற்ற கூடிய பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அதனை தொடந்து மேற்படி அறைக்கு நேர் எதிரே இருந்த பொறியியல் பிரிவிற்கு சென்றபோது வாயிலுக்கு நேராக மூலையில் மேற்கு பார்த்த இருந்த இருக்கை காலியாக இருந்தது. அதை பற்றி விசாரிக்க அது தட்டசர் (தற்காலிகம்) திரு.முருகவேல் என்பவருடைது என்றும், அவர் காலையில் அலுவலகத்திற்கு வந்ததகாவும், மதிய உணவு அருந்த வெளியே சென்றவர் வரவில்லை என்று தெரிவித்தார்கள். அந்த இருக்கைக்கு இடது புறம் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க தன் பெயர் திரு.தினேஷ், பணி ஆய்வாளர் என்றும், அவருக்கு இடது புறமாக வடக்கு பார்த்து இருந்த இருக்கையை பற்றி விசாரிக்க, தன் பெயர் திரு.கோபிநாத், பணி மேற்பார்வையாளர் என்றும், அவருக்கு இடது புறம் கிழக்கு பார்த்து இருந்த இருக்கையை பற்றி விசாரிக்க அது திரு.பிரவீன், தொழிநுட்ப உதவியாளருடையது (தற்காலிகம்) என்றும், அவர் காலையில் அலுவலகத்திற்கு வந்ததகாவும், மதிய உணவு அருந்த வெளியே சென்றவர் வரவில்லை என்று தெரிவித்தார்கள். பின்னர் அவ்விருக்கைக்கு இடது புறம் கிழக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க தனது பெயர் திரு.பிராபாகரன் என்றும், இளநிலை உதவியாளர் என்றும் தெரிவித்தார். மேற்படி அறையில் இருந்த நபர்களில் பெண் அலுவலர்களை பெண்காவலர் திருமதி.தேவிகா அவர்கள் உதவியுடனும் மற்ற அலுவலர்களையும், அவர்களது இருக்கைகளையும் காவல் குழுவினரை வைத்து, சோதனை செய்ததில் கைப்பற்றகூடிய பணமோ, ஆவணமோ எதும் இல்லை. பின்னர் மேற்படி அலுவலகத்தில் இருந்த ஆவண வைப்பறை, நகர்மன்ற தலைவர் அறை, நகர்மன்ற கூடம், நில அளவைபிரிவு, நகரமைப்பு பிரிவு, நகராட்சி பொறியாளர் அறை, பொறியியல் அறை, வருவாய் பிரிவு மற்றும் இதர அறைகளை சோதனை செய்ததில் கைப்பற்றப்படகூடிய பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அதனை தொடர்ந்து உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் வரண்டாவில் இருந்த நபர்களான

1. திரு.சக்தி பிரகாஷ் த/பெ சீனுவாசன் எண்.2/1B, சரவணபவ நகர், உளுந்தூர்பேட்டை என்றும் தான் பூங்காவில் மண் நிரப்புவது தொடர்பாக மனு அளிக்க வந்திருப்பதாக கூறினார். அவரை சோதனை செய்த போது அவரிடம் ரூ.500/- பணம் இருந்தது, அதை பற்றி கேட்க, தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக கூறிய காரணம் ஏற்புடையதாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.500/- அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

2. திரு.விஜயகுமார், வயது 46/2026, த/பெ கண்ணன், அலுவலக உதவியாளராக ஒருகிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், தான் தொழில் வரி கட்டுவதற்காக வந்ததாக கூறினார். அவரை சோதனை செய்ததில் அவரிடம் ரூ. 18,240/- இருந்தது. அதை பற்றி கேட்க தன் அலுவலகத்தில் பணிபுரியும் 16 நபர்கள் கட்ட வேண்டிய தொழில் வரிக்கான தொகை என்றும் அதற்கான அலுவலகம் கடிதம் வைத்திருந்தார், எனவே மேற்படி பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

3. திரு.சி.அலெக்ஸாண்டர் த/பெ சீமோன், பூண்டி ரோடு, இறையூரை சேர்ந்தவரை விசாரிக்க தான் உளுந்தூர்பேட்டை Union Chairman என்றும், தான்

அலுவலகத்தில் இருந்த திரு.வைத்தியலிங்கம், Municipality Vice Chairman னை பார்க்க வந்ததாக னார். அவரை சோதனை செய்த போது அவரிடம் ரூ.11,400/- (500 x 22) (100 x 4) பணம் இருந்தது, அதை பற்றி கேட்க, தான் V.S Construction என்ற நிறுவனம் வைத்திருப்பதாகவும், மேற்படி நிறுவனத்தில் உள்ள வாகனங்களுக்கு வரி கட்டுவதற்காக வைத்திருந்த பணம் என்று கூறினார். மேற்படி அவர் கூறிய காரணம் ஏற்புடையதாக இருந்ததால் மேற்படி பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

4. பின்னர் கார்த்திக், த/பெ அன்பழகன் என்பவரை விசாரிக்க தான் மேற்படி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிவதாக சொன்னார். அவரை சோதனை செய்ததில் அவரிடம் ரூ.2,27,704/- இருந்தது. அதை பற்றி கேட்க, அது மேற்படி நகராட்சியில் நேற்றைய தினம் வசூலித்த வரி வசூல் தொகை என்றும், denomination கூடிய Bank Deposit pay in slip காண்பித்தார். அதை பற்றி மேற்படி அலுவலக காசளாரிடம் கேட்டபோது தான் இன்று அலுவலகத்திற்கு தாமதமாக வந்ததாகவும் எனவே நேற்று கட்டவேண்டிய வரிவசூல் பணத்தை தற்போது அலுவலக உதவியாளரிடம் Indian Overseas Bank -ல் கட்டுவதற்காக கொடுத்ததாகவும் கூறினார். எனவே மேற்படி பணம் அவர் வசமே திருப்பி ஒப்படைக்கப்பட்டு மேற்படி வங்கியில் கட்ட அனுமதிக்கப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற இரகசீய தகவலின் அடிப்படையில் அலுவலகத்தில் இருந்த

1. திரு.தேவநாதன், நகராட்சி பொறியாளரின் கைபேசியிலிருந்த கூகுள் பே செயலியில் தரவுகளை பார்வையிட்டதில் மாத சம்பளம் அல்லாமல் திரு.யஷ்வந், பரப்புரையாளர் (தற்காலிகம்), திரு.ரஞ்சித் குடிநீர் விநியோகிஸ்தர் (தற்காலிகம்), திரு.கமல், அலுவலக உதவியாளர் மற்றும் இதரநபர்களிடமிருந்து மேற்படி செயலியின் மூலம் கீழ்கண்டுள்ளவாறு பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

வ.எண்.	மாதம்	தொகை
1.	2026 மே	ரூ.2,52,300/-
2.	2026 ஜீலை	ரூ.74,300/-
3.	2026 ஆகஸ்ட்	ரூ.99,100/-
	மொத்தம்	ரூ.4,25,700/-

மேற்படி தரவுகளை பற்றி விசாரித்தபோது மேற்படி கூகுள் பே செயலியின் வங்கி கணக்கு எண் தன்னுடையது அல்ல என்றும் அது தனது மணைவி சிந்து பெயரில் உள்ளது என்றும் சொன்னார். ஆனால் மேற்படி பணவரவுவுளை பற்றி அவரால் சரியான விளக்கமோ, பதிலோ அளிக்க இயலவில்லை. எனவே மேற்படி தரவுகளின் விவரம் மகஜரில் குறித்து கொள்ளப்பட்டு அவரது கைபேசி அவர்வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

2. திருமதி.வெண்ணிலா, வருவாய் உதவியாளர் கைபேசியிலிருந்த கூகுள் பே செயலியில் தரவுகளை பார்வையிட்டதில் மாத சம்பளம் அல்லாமல் திரு.ரவி,

திரு.மணி, திரு.லஷ்மிநாரயணன் மற்றும் இதரநபர்களிடமிருந்து மேற்படி செயலியின் மூலம் கீழ்கண்டுள்ளவாறு பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

வ.எண்.	மாதம்	தொகை
1.	2026 மே	ரூ.1,35,161/-
2.	2026 ஜீன்	ரூ.1,00,301/-
3.	2026 ஜீலை	ரூ.1,11,979/-
	மொத்தம்	ரூ. 3,47,441/-

மேற்படி தரவுகளை பற்றி விசாரித்தபோது அவரால் சரியான விளக்கமோ, பதிலோ அளிக்க இயலவில்லை. எனவே மேற்படி தரவுகளின் விவரம் மகஜரில் குறித்து கொள்ளப்பட்டு அவரது கைபேசி அவர்வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

3. திரு.கோபிநாத், பணிமேற்பார்வையாளர், நகராட்சி பொறியாளரின் கைபேசியிலிருந்த கூகுள் பே செயலியில் தரவுகளை பார்வையிட்டதில் மாத சம்பளம் அல்லாமல் திரு.யஷ்வந், பரபுரையாளர் (தற்காலிகம்), திரு.ரஞ்சித் குடிநீர் விநியோகிஸ்தர் (தற்காலிகம்), திரு.கமல், அலுவலக உதவியாளர் மற்றும் இதரநபர்களிடமிருந்து மேற்படி செயலியின் மூலம் கீழ்கண்டுள்ளவாறு பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

வ.எண்.	மாதம்	தொகை
1.	2026 ஜீலை	ரூ.45,500/-
2.	2026 ஆகஸ்ட்	ரூ.73,000/-
3.	2026 செப்டம்பர்	ரூ.1,67,250/-
	மொத்தம்	ரூ.2,85,750/-

மேற்படி தரவுகளை பற்றி விசாரித்தபோது மேற்படி பணவரவுகளை பற்றி அவரால் சரியான விளக்கமோ, பதிலோ அளிக்க இயலவில்லை. எனவே மேற்படி தரவுகளின் விவரம் மகஜரில் குறித்து கொள்ளப்பட்டு அவரது கைபேசி அவர்வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பணியில் இருந்த உளுந்தூர்பேட்டை நிர்வாக அலுவலர் திரு.சோமசுந்தரம் அவர்களிடம் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் வருகை பதிவேடு மற்றும் இதர பதிவேடுகளை பற்றி கேட்டபோது 1.பொது பிரிவு வருகை பதிவேடு, 2.வருவாய் பிரிவு வருகை பதிவேடு, 3.பொதுசுகாததரப்பிரிவு வருகை பதிவேடு, 4.நகராட்சி பொறியியல் பிரிவு வருகைப்பதிவேடு மற்றும் 5.உளுந்தூர்பேட்டை நகராட்சி பணியாளர்கள் ரொக்கப்பதிவேடு ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பொது சுகாதாரபிரிவு வருகை பதிவேடு, வருவாய் பிரிவு வருகை பதிவேடு, பொறியியல் பிரிவு வருகை பதிவேடு ஆகியவை பார்வையிட்டதில் இவ்வாண்டு மே-2026 மாதம் முதல் நகராட்சி ஆணையாளர் சரிவர கையொப்பம் இடாதது தெரியவருகிறது. மேலும் இன்று திருமதி.திவ்யா, நகரஆய்வாளர் அவர்கள்

வந்ததற்கான கையொப்பம் வருகை பதிவேட்டில் இருக்கிறது. ஆனால் அவர் மதிய அலுவலகத்தில் இல்லாததற்கான எவ்வித பதிவுகளும் இல்லை. மேலும் இவ்வலுவல பொதுப்பிரிவு வருகைபதிவேட்டை பார்வையிட்டபோது செப்டம்பர்-2026 மாதத்திற்கா பக்கம்-17-ல் உள்ள பதிவுகளில் வரிசை எண்.4-ல் பழனிவேல், உதவியாள என்பவருக்கு 21 மற்றும 22-ந்தேதி எவ்வித பதிவுகளும் இல்லாமல் உள்ளது. மேலு வரிசை எண்.11 இரா.புவனேஸ்வரி, பதிவறை எழுத்தரின் கையொப்பம் 22-ந்தேத செய்யப்படாமல் உள்ளது. பக்கம் 18-ல் வரிசை எண்.14-ல் அலுவலக உதவியாள திரு.கார்த்திக்கின் கையொப்பம் 21-ந்தேதி இடாமல் உள்ளது. மேலும் அலுவல மேலாளர் பணியில் இருந்தபோதும் 21 மற்றும் 22-ந்தேதி கையொப்பம் இல்லை. மேலு இவ்வலுவலக இயக்கப்பதிவேட்டை பற்றி கேட்டபோது மேற்படி பதிவேடு சமர்பிக்கப்படவில்லை, மேலும் அதற்கான உரிய விளக்கமும் அளிக்கப்படவில்லை அதனை தொடர்ந்து மேற்கூறிய அனைத்து பதிவேடுகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து கொடி நாள் வசூல் குறித்து இவ்வலுவலக நிர்வாக அலுவலர் திரு.சோமசுந்தரம் அவர்களிடம் கேட்டபோது, கொடிநாள் வசூல் ஆன்லைன் மூலம் வசூலிப்பதாவும், தனியாக பதிவேடு ஏதும் இவ்வலுவகத்தில் பராமரிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். பிறகு உளுந்தூர்பேட்டை நகராட்சி நிர்வாக அலுவலர் திரு.சோமசுந்தரம் மற்றும் சந்தேகத்திற்கு அடிப்படையிலான UPI பரிவத்தனை உடைய நபர்களிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு தலைமை காவலர் திருமதி.தேவிகா என்பவர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் கள்ளக்குறிச்சி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 22.09.2026-ம் தேதி சுமார் 15.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 22.09.2026-ம் தேதி சுமார் 23.50 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தொிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் திரு.தேவநாதன், நகராட்சி பொறியாளர் கைபேசியிலிருந்த UPI பரிவர்த்தணைகளை பார்வையிட்டதில் தனது மனைவி சிந்து பெயரில் உள்ள கணக்கு எண்களில் திரு.யஷ்வந், பரப்புரையாளர் (தற்காலிகம்), திரு.ரஞ்சித் குடிநீர் விநியோகிஸ்தர் (தற்காலிகம்), திரு.கமல், அலுவலக உதவியாளர் மற்றும் இதரநபர்களிடமிருந்து கூகுள்பே செயலின் மூலம் ரூ.4,25,700/- பெற்றுள்ளார். அதேபோல திருமதி.வெண்ணிலா, வருவாய் உதவியாளர் கைபேசியிலிருந்த UPI பரிவர்த்தணைகளை பார்வையிட்டதில் திரு.ரவி, திரு.மணி, திரு.லஷ்மிநாரயணன் மற்றும் இதரநபர்களிடமிருந்து கூகுள் பே செயலி மூலம் ரூ.3,47,441/- பெற்றுளளார். மேலும் திரு.கோபிநாத், பணிமேற்பார்வையாளர் கைபேசியிலிருந்த UPI பரிவர்த்தணைகளை பார்வையிட்டதில் திரு.யஷ்வந், பரபுரையாளர் (தற்காலிகம்), திரு.ரஞ்சித் குடிநீர் விநியோகிஸ்தர் (தற்காலிகம்), திரு.கமல், அலுவலக உதவியாளர் மற்றும் இதரநபர்களிடமிருந்து கூகுள்பே செயலி மூலம் ரூ.2,85,750/- பெற்றுள்ளார்.

மேற்படி பரிவர்த்தனைக்கு திரு.நா.தேவநாதன், நகராட்சி பொறியாளர், திருமதி.இரா.வெண்ணிலா, வருவாய் உதவியாளர் மற்றும் திரு.வீ.கோபிநாத், பணிமேற்பார்வையாளர் ஆகிய 03 நபர்களாலும் சரியான விளக்கமோ, முகாந்திரமோ கூறவில்லை என்பதால், மேற்படி இணைவழியில் பரிவர்த்தனை செய்யப்பட்ட பணம் மேற்படி அலுவலக அலுவலர்கள், அலுவல் பணி ஆற்றியதற்கு முறையற்ற வழியிலும், நேர்மையற்ற முறையிலும், அனுகூலமாகவோ, பிரதிபலனாகவோ பெற்றிருக்கக்கூடும் என்று சந்தேகிபதற்கு போதுமான முகாந்திரம் இருப்பது தெரிய வந்ததால், நான் கொடுக்கும் இந்த புகாரின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட அலுவலர்களான திரு.நா.தேவநாதன், நகராட்சி பொறியாளர், நகராட்சி அலுவலகம், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம், திரு.வீ.கோபிநாத், பணிமேற்பார்யாளர், நகராட்சி அலுவலகம், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் திருமதி.இரா.வெண்ணிலா க/பெ இராமதாஸ், வருவாய் உதவியாளர், நகராட்சி அலுவலகம், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

Madam,

Received the above computer typed complaint on 23.09.2026 at about 14.00 hrs. After getting oral permission from the DVAC, Chennai, I am Registering a case in Kallakurichi Vigilance and Anti-Corruption, Cr.No.10/2026/KLK, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 16.00 hrs today on 23.09.2026 sd xxxxxx on 23.09.2026 (E.Arunraj) (Inspector of Police, V&AC, Kallakurichi).

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Hon'ble Principal District and Sessions Judge, Kallakurichi and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

23.09.26

(E.Arunraj)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Kallakurichi.